செ.வெ.எண்.28 நாள்:17.11.2020

**நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் ரூ.1.66 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும், முடிவுற்ற பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.**

---

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் ரூ.1.66 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும், முடிவுற்ற பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.11.2020) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம் கோத்திகிரி ஊராட்சி ஒன்றியம் நெடுகுளா ஊராட்சிக்குட்பட்ட நெடுகுளாவில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.9.95 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட செக்டேம் பணியினையும், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட தரைமட்ட நீர்தேக்க தொட்டி பணியினையும், RCSIDS திட்டத்தின் கீழ் ரூ.21.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் கன்னேரிமுக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற்று வரும் பூச்சுவேலையினையும், நெடுகுளா ஊராட்சிக்குட்பட்ட லிலிஹட்டி முதல் கப்பட்டி வரை ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி திட்டத்தின் கீழ் ரூ.82.98 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட சாலை பணியினையும், நெடுகுளா ஊராட்சிக்குட்பட்ட விஓசி நகர் பகுதியில் ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் தரைமட்ட நீர்தேக்க தொட்டி பணியினையும், ஜக்கனாரை ஊராட்சிக்குட்பட்ட கேசலாடாவில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிட பணியினையும், மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.17.90 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட ஜக்கனாரை ஊராட்சிக்குட்பட்ட ஆடுபெட்டு கிராம சாலை பணியினையும் என மொத்தம் ரூ.1.66 கோடி மதிப்பில் முடிக்கப்பட்ட, நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் பணியினை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தினார்.

முன்னதாக கோத்தகிரி சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட கன்னேரிமுக்கு ஜான்சல்லீவன் நினைவு பூங்காவில், பூங்கா மலர் செடிகள் நடவு செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமாலினி, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திரு.சிவசுப்ரமணியம் சாம்ராஜ், செயற்பொறியாளர் திருமதி.சுஜாதா, கோத்தகிரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.மணிகண்டன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நந்தகுமார், திரு.ஜெயபாலன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

***வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்***